**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**
**MCOP 98 /2023**

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. செல்வமணி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ராஜேந்திரன் | த/பெ.: | வடிவேல் |
| கிராமம்: | நெடும்பலம் | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | கூலி வேலை |
| வயது: | 56 | முகவரி: | நெடும்பலம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 01.04.2025.

**<u>முதல் விசாரணை:_</u>**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. பின்வரும் ஆவணங்களை என் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 15.01.2020 | முதல் தகவல் அறிக்கை | உண்மை நகல் |
| ம.சா.ஆ.2 | 15.01.2020 | விபத்து பதிவேடு அறிக்கை | உண்மை நகல் |
| ம.சா.ஆ.3 | | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் MV Report | உண்மை நகல் |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.4 | | 2ம் எதிர்மனுதார் வாகனத்திற்கு உண்டான பாலிசி நகல் | நகல் |
| ம.சா.ஆ.5 | | மனுதாரர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற டிச்சார்ஜ் நோட்டு | அசல் |
| ம.சா.ஆ.6 | | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் RC Book | நகல் |
| ம.சா.ஆ.7 | | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் உரிமம் | நகல் |
| ம.சா.ஆ.8 | | எனது பெயரிலுள்ள ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) | நகல் |

மனுப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

**<u>1ம் எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை:-.</u>**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். அதற்கான ஆதாரங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும்.அதில் 1ம் எதிர்மனுதாரர் பெயர் ரூபன் ராஜ் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரின் பெயரில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் ஆரோக்கிய ராஜ் என உள்ளது என்றால் ரூபன் ராஜ்தான சரியானது. ஆனால் முதல் தகவல் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள ஆரோக்கிய ராஜ் என்பவர் பற்றி எனக்கு யார் என்று தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ-7 ஆவணத்தில் ஓட்டுநர் உரிமம் ஆரோக்கியராஜ் என்பவரின் பெயரில்தான் உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் விவசாய கூலி வேலை. சம்பவ நாளில் கார்த்தி என்பவர் வீட்டில் விவசாய

வேலை செய்து விட்டேன் என்றால் சரிதான். சம்பவ நடந்நததாக சொல்லப்படும் தேதியில் திருத்துறைப்பூண்டியில் உள்ள சீமாட்டி ஜவுளிக்கடையில் வேலை பார்த்து வந்ததாக சொன்னால் அன்றைய தேதியில் நான் சீமாட்டி கடைக்கு வேலைக்கு செல்லவில்லை. சீமாட்டியில் வேலை பாரத்ததாக ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. விபத்து நடந்ததாக சொல்லப்படும் தேதியில் நான் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான விபத்து பதிவேட்டு நகல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த விபத்து விபத்து பதிவேட்டில் நான் குடிபோதையில் இருந்ததாக எழுதப்பட்டுள்ளதால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் மன்னார்குடியில் உள்ள ஒரு வழக்கறிஞரிடம் கொடுத்தேன். எனக்கு உடம்பில் வலி ஏற்படும்போது எப்போதாவது மது அருந்தும் பழக்கம் உண்டு. நான் மனுவில் சொல்லியதை பொய் என்றும், விபத்திற்கும் ரூபன் ராஜீக்கும் சம்மந்தம் இல்லை என்றும், அதனால் நான் ஆரோக்கிய ராஜ் என்பவரை வழக்கில் சேர்க்காமல் அவருடைய ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவுதான் காரணம் என்று சொன்னால் சரியல்ல. நான் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான எந்த ஆவணங்கயையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் நான் அரசு மருத்துவமனையில்தான் சிகிச்சை பெற்றேன். மனுவில் கோரியபடி 2ம் எதிர்மனுதாரர் எந்தவிதமான நஷ்ட ஈடும் தொகையும் கொடுக்க

**கடமைபட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.**

**மறுவிசாரணை இல்லை.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.